[1972 டிசம்பர் 13

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் . தலைவரவர்களே, 1972-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/72) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) 1972-ம் ஆண்டு, மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம், மற்றும் பவானி சாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72).

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

நகரியங்களை நிர்வகிப்பதற்காக அமைக்கப்படும் நகரியக் குழுக்களில் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் லோக் சபை உறுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று துணைச் சட்டக்குழு பரிந்துரைத்துள்ளது. அரசு மேற்சொன்ன பரிவுரையை ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கிணங்க, தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 1940-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1940) 1954-ஆம் ஆண்டு குற்றாலம் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1954) 1954-ஆம் ஆண்டு பவானிசாகர் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1954) ஆகிய சட்டங்களைத் திருத்த முடிவு செய்தது.

நகரியக் குழு உறுப்பினர்கள் நகரியக் குழுவில் தாம் அவ்வாறு உறுப்பினர்களாக இருப்பதனாலேயே சட்டப் பேரவை அல்லது சட்ட மேலவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு

* 7—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1972 டிசம்பர் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அல்லது அவ்வாறு உறுப்பினராயிருப்பதற்கு தகுதியற்றவர்களாகிவிட மாட்டார்கள் என்பதற்கும் இச்சட்ட வரைவில் விதித்துறை செய்யப் பட்டுள்ளது.

மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க இச்சட்ட வரைவு விழைகிறது. பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட வரைவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு பேரவையை வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1972-ம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றால நகரியம் மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 49/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1972-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றால நகரியம் மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 49/72) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டு மென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.